## 2025ஆம் ஆண்டுக்கான இலக்கிய மாமணி விருது

# மரபுத்தமிழ் - ஆய்வுத் தமிழ் - படைப்புத்தமிழ் - மூன்று விருதுகள்!

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜன.14-

**பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமையோடு இலங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தொண்டாற்றிடும் தமிழ்த் தாயின் அறிஞர் பெருமக்களுக்குத் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் வழங்கி, அவர்தம் புலமைக்கும் தொண்டுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது.**

அவ்வகையில் மரபுத்தமிழ், ஆய்வுத்தமிழ், படைப்புத் தமிழ் ஆகிய மூன்று வகைப்பாட்டில் அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் உயரிய விருதான இலக்கிய மாமணி விருது வழங்கப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி 3.6.2021 அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால், தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் இலக்கிய மாமணி என்ற விருது உருவாக்கப்பட்டு தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் மூன்று அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, மரபுத்தமிழ், ஆய்வுத் தமிழ், படைப்புத்தமிழ் ஆகிய வகைப்பாட்டில் 2021ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வரிசையில், **2025ஆம் ஆண்டிற்கான இலக்கிய மாமணி விருதுகளில் மரபுத் தமிழ் வகைப்பாட்டில்** "உலகின் பல்வேறு நாடுகளில் செம்மாந்த இலக்கிய உரைகளை நிகழ்த்தி வருபவரும் தினமணி நாளிதழில் ஞாயிறு தோறும் கம்பன் தமிழமுதம் என்னும் தலைப்பில் ஆழ்ந்த கட்டுரைகள் எழுதியதோடு தொடர்ந்து பல்வேறு இதழ்களில் எழுதி வருபவரும் தமிழ்நாட்டில் பல இளைஞர்களுக்கு மேடைப் பேச்சாற்றலுக்கான நல்வழிகாட்டியாகவும் உந்து சக்தியாகவும் திகழ்ந்து வருபவரும் சென்னை, கம்பன் கழகத்தில் செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றியவரும் மாபெரும் தமிழறிஞர்களின் வழிகாட்டுதல்களோடு இலக்கியப்பணியாற்றி வரும் **இலக்கியச் சுடர் த. இராமலிங்கம் (வயது 68)** அவர்களும்;

ஆய்வுத் தமிழ் வகைப்பாட்டில் இலக்கியப் பேராசான் ஜீவானந்தம் அவர்களால் 1959இல் தொடங்கப்பட்ட தாமரை இலக்கிய இதழின் ஆசிரியராக கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றியவரும், இந்திய கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரும், சமூக விழிப்பு கொண்ட எழுத்துப் பணிகளை மேற்கொண்டு வருபவரும், சீர்திருத்த மேடைப் பேச்சாளராக அணி செய்பவரும், "வீழ்வேன் என்று நினைத்தாயோ?, "தீக்குள் விரலை வைத்தேன்", தமிழ் நாடு பிறந்தது (தொகுப்பு)" உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவருமான எழுத்தாளர் **சி.மகேந்திரன் (வயது 73)** அவர்களும்;

**படைப்புத்தமிழ் வகைப்பாட்டில்** முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆசிரியராக இருந்த 'நம்நாடு' வார ஏட்டில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதியதோடு, வைகறை முரசு இதழில் தொடர்ந்து எழுதியவரும் தென்காசி திருவள்ளுவர் கழகத்தில் வள்ளுவம் தொடர்பான தொடர் சொற்பொழிவுகளை ஆற்றி வருபவரும், திராவிடச் சிந்தனையில் ஆழ்ந்து பல படைப்பு நூல்களை வெளியிட்டதோடு, தமிழ்நாட்டில் இருந்து பல்வேறு அறிஞர்களை அழைத்து இராசபாளையத்தில் அருமையான இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்துவதை தொடர் பணியாக செய்யும் அறிவுத்திலகமான விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த **இரா.நரேந்திரகுமார் (வயது 74)** அவர்களும் தெரிவு செய்யப் பெற்றுள்ளனர்.

இலக்கிய மாமணி விருது பெறும் விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ரூபாய் ஐந்து இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை ஆகியவை வழங்கப்பெற்று, பொன்னாடை அணிவித்து சிறப்பிக்கப்பெறுவார்கள்.

இவ்விருதுகள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் திருவள்ளுவர் திருநாளான 16.01.2026 அன்று வழங்கப்படவுள்ளன.



தமிழர் திருநாள் பொங்கல் விழாவையொட்டி, இன்று தொடங்கவுள்ள – தமிழர்களின் கலைத் திறனைக் காட்டும் பாரம்பரியக் கலைகள் அரங்கேறும் 'சென்னை சங்கமம் – 2026' நிகழ்வுக்கான அழைப்பிதழை கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம், நேற்று அவரது இல்லத்தில், கழக துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வழங்கினார்.

## சுப்பையா தலைமை!

# ச.தங்கவேலு - சீனிவாசன் - பரமகுரு முன்னிலை!

### சங்கரன்கோவிலில் 101 பானைகளில் சமத்துவப் பொங்கல்!

### வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

தென்காசி. ஜன.14-

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சங்கரன்கோவில் சட்டமன்ற அலுவலகத்தில் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழர் திருநாளை முன்னிட்டு 101 பானைகளில் சமத்துவ பொங்கலிடும் நிகழ்வு மாவட்ட அவைத் தலைவர் கோ.சுப்பையா தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு, யு.எஸ்.டி.சீனி வாசன், பரமகுரு மாவட்ட மருத்துவ அணி துணை செயலாளர் செண்பக விநாயகம், மாவட்ட பொருளாளர் சரவணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.பங்கேற்று சமத்துவப் பொங்கலிட்டு துவக்கி வைத்தார்.

நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர்கள் ராஜதுரை,புனிதா, மனோகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் வேலுச்சாமி பாண்டியன், தேவா, பராசக்தி, மகேஸ்வரி,சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டி யன், கடற்கரை, பொன்முத்தையா பாண்டியன்,பெரியதுரை, வெள்ளத்துரை, ராமச்சந்திரன், சேர்மத்துரை,கிறிஸ்டோபர், பால்ராஜ்,அன்பரசு,குணசேகரன், நகர செயலாளர்கள் மு.பிரகாஷ், அந்தோணி சாமி,நாகூர் கனி,பேரூர் செயலாளர்கள் ரூபிபாலசுப்பிர மணியன்,குருசாமி, மாரிமுத்து,சேது சுப்பிரமணியன்,நகர்மன்ற தலைவர் கள் கௌசல்யா வெங்கடேசன் (சங்கரன்கோவில்) விஜயா சவுந்திரபாண்டியன் (புளியங்குடி) சார்பு அணி தலைவர்கள் வக்கீல் அணி முத்துராமலிங்கம்,மருத்துவர் அணி சுமதி, பொறியாளர் அணி சங்கர்,விவசாய அணி சேர்மன் பால சுப்பிரமணியன், அணி அமைப்பாளர்கள் பிச்சையா, உதயகுமார்,முருகேசன்,பசுபதி பாண்டியன், சந்திரன்,காசிராஜன், அப்பாஸ், குருவசந்த்,கிப்ட்சன், மின்வாரிய தொ.மு.ச திட்ட செயலாளர் மகாராஜன், அணி துணை அமைப்பாளர்கள் ஜலால், ராஜராஜன், கார்த்தி,அன்சாரி,ராஜ், வீரமணி, சரவணன்,ஐ டி விங்க் சிவசங்கர நாராயணன், ரஜினிகாந்த், கழக மூத்த முன்னாடி சண்முகையா, வழக்கறிஞர்கள் கண்ணன், அன்புச்செல்வன்,அருணாச்சலம், பிரபாகரன், காளிராஜ், வார்டு செயலாளர்கள் வாழைக்காய் துரைப் பாண்டியன்,பாட்டத்தூர் ராமலிங்கம், வெள்ளத்துரை, மகளிர் அணி அண்ணாமலை,சீதாலட்சுமி,

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் செய்யது பட்டாணி,திராவிட தமிழர் கட்சி மகாலிங்கம்,ஆதி தமிழர் பேரவை மதன்,ஆதி தமிழர் பொதிகை ஆதவன் உள்பட கழத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

# போடியில் சமத்துவப் பொங்கல் விழா!

தேனி, ஜன.14-

தேனி வடக்கு மாவட்டம் போடிதொகுதிமேல சொக்கநாதபுரம்பகுதியில் மாவட்ட அளவிலான கபடி போட்டியில் பாலார் பட்டி அணி சாம்பியன் பெற்றது .வெற்றி பெற்ற அணிகளுக்குபோடி மேற்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன்.கிழக்கு ஒன்றிய செயலாளர் அய்யப்பன். ஆகியோர் பரிசு மற்றும் கோப்பைகளை வழங்கினார்கள்.தேனி மாவட்டம் போடி அருகே உள்ள மேல சொக்கநாத புரத்தில் தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் போடி மேற்கு மற்றும் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்ட அளவிலான கபடி போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் தேனி ,போடி, பெரியகுளம், கோடாங்கிபட்டி, பாலார்பட்டி, ராசிங்காபுரம், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 15க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்று விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதி போட்டியில் பாலார் பட்டி அணியும் மேலசொக்கநாதபுரம் அணியும் மோதின. இதில் 15க்கு 25 புள்ளிகள் பாலார் பட்டி அணி வெற்றி பெற்றது. சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

இதில் முதல் இடம் பிடித்த அணிக்கு ரூபாய் 15 ஆயிரம் ரொக்க பணம் மற்றும் கோப்பை 2 இடம் பிடித்த அணிக்கு ரூபாய் 10 ஆயிரம் ரொக்க பணம் மற்றும் கோப்பைகளை மேற்கு ஒன்றிய செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் கிழக்கு ஒன்றிய செயலாளர் அய்யப்பன் ஆகியோர் வழங்கினார்கள்

இதில் பேரூராட்சி செயலாளர் ராஜேந்திரன் , பூதிப்புரம்பேரூராட்சி சேர்மன், கவியரசு மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




சென்னை சங்கமம்

நம்ம ஊரு திருவிழா

1,500 கலைஞர்கள் ! 40 கிராமியக் கலைகள் !
20 இடங்களில்
மாபெரும் உணவுத் திருவிழாவுடன்



வெல்வோம் ஒன்றாக!



பொய்க்கால் குதிரை | தேவராட்டம் | தெருக்கூத்து | பொம்மலாட்டம் | மயிலாட்டம் | தப்பாட்டம் | சிலம்பம் | உணவுத் திருவிழா

15.1.2026 முதல் 18.1.2026 வரை மாலை 6.00 மணி முதல் இரவு 9 மணி வரை
சென்னை மாநகரில் சங்கமம் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் 20 இடங்கள்

கொளத்தூர்
மாநகராட்சி விளையாட்டு மைதானம்

இராயபுரம்
ராபின்சன் விளையாட்டு மைதானம்

நுங்கம்பாக்கம்
வள்ளுவர் கோட்டம்,

அண்ணா நகர்
கோபுரப்பூங்கா

பல்லாவரம்
கன்டோன்மெண்ட் பூங்கா

அசோக்நகர்
மாநகராட்சி விளையாட்டுத் திடல்

ஜாபர்கான்பேட்டை
(ராகவன் காலனி)
மாநகராட்சி விளையாட்டுத் திடல்

ஆவடி
படைத்துறை உடைத்
தொழிற்சாலை வளாகம்

அண்ணா மேம்பாலம் அருகில்,
செம்மொழிப் பூங்கா,

இராஜா அண்ணாமலைபுரம்
இசைக்கல்லூரி வளாகம்,

பெசன்ட் நகர்
எலியட்ஸ் கடற்கரை,

கோயம்பேடு
ஜெய்நகர் பூங்கா

தாம்பரம்
வள்ளுவர் குருகுலம் பள்ளி

கிண்டி
கத்திபாரா சந்திப்பு

தியாகராய நகர்,
(நடேசன் பூங்கா எதிரில்)
மாநகராட்சி மைதானம்

வளசரவாக்கம்
(பழனியப்பா நகர்)
லேமேக்ஸ் பள்ளி வளாகம்

எழும்பூர்
இராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் - அருங்காட்சியகம்
மெரினா கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை மற்றும்
அனைத்து மாவட்டங்களிலும் பொங்கல் விழா கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

தொடக்க விழா

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

நாள் : 14.1.2026, புதன்கிழமை

நேரம் : மாலை 6.00 மணி

இடம் : இராஜரத்தினம் விளையாட்டு அரங்கம், எழும்பூர், சென்னை

எல்லார்க்கும் எல்லாம் !

வெளியீடு இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத்துறை, சென்னை –9

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

செ.ம.தொ.இ./47/வரைகலை/2026